

காணை தெற்கு ஒன்றியம் மல்லிகைப்பட்டு கிளை செயலாளர் பரசுராமன் அவர்கள் சாலை விபத்தில் கையில் முறிவு ஏற்பட்டது இதனை அறிந்த விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி மருத்துவமனைக்கு நேரில் சென்று நலம் விசாரித்தார். உடன் ஒன்றிய செயலாளர் கல்பட்டு வி.இராஜா, மாவட்ட கவுன்சிலர் கே.சிவக்குமார், நகர பொருளாளர் என்.என்..இளங்கோ, ஒன்றிய அவைத்தலைவர் நாராயணசாமி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஞானம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து இராணிப்பேட்டை மாவட்டம். அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம். தணிகைபோளூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற திட்ட முகாமில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மனுக்கள் பதிவு செய்யப்படுவதை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா, ஒன்றியக் குழுதலைவர் நிர்மலா சௌந்தர், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் அம்பிகா பாபு, ஊராட்சி மன்றத் தலைவர் வெங்கடேசன் ஒன்றிய செயலாளர்கள் ஆ.சௌந்தர் கே.பசுபதி தலைமை செயற்குழு உறுப்பினர் மு.கண்ணையன் பொதுக்குழு உறுப்பினர் கிருஷ்ணன் அறங்காவலர் குழு உறுப்பினர் என்.ராஜ்குமார் முன்னாள் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஷீலா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வில்லியனூர் தொகுதியில்

# ரூ.34 லட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகள்

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார் !

புதுச்சேரி, ஜூலை 17-

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்ற தொகுதியில் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் சாலைகள், கழிவுநீர் வாய்க்கால்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக வில்லியனூர் தொகுதிக்கு உட்பட்ட திருவள்ளுவர் நகர் விரிவாக்கம் பகுதியில் ரூ. 19 லட்சத்து 37 ஆயிரம் மதிப்பீட்டில் பக்கவாட்டு கழிவுநீர் வாய்க்கால் உடன் கூடிய தார் சாலை மற்றும் ரமேஷ் நகர் மற்றும் ஆதீஷ்வரா நகர் ஆகிய பகுதிகளில் ரூ. 14 லட்சத்து 56 ஆயிரம் மதிப்பீட்டில் மண் சாலை அமைக்கும் பணிகளுக்கான நிகழ்ச்சி இன்று காலை நடந்தது.

இதில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா கலந்து கொண்டு, சாலைகள் அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சிகளில், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ், இளநிலைப் பொறியாளர் சத்தியநாராயணா, திருவள்ளுவர் நகர் ஊர் முக்கியஸ்தர்கள் சூசை ராஜ், சிவபாலன், ஜேசப்பா, சண்முகம், ரவிச்சந்திரன், தனஞ்செழியன், சௌரிராஜன், இருதயராஜ், மந்திரி குமார், ஜரம், கிருஷ்ணராஜ், வெண்ணிலா, தாமஸ், கமல்ராஜ், கிஷோர், செல்வ லிங்கம், சுகுமாரன், ரமேஷ் நகர் மற்றும் ஆதீசுவரர் நகர் பூமி பூஜையில் கலந்து கொண்ட ஊர் முக்கியஸ்தர்கள் சரவணன், ராமதாஸ், ரவி, சேகர், முத்து, கோதண்டம், அன்பு, முருகன், ஜெய்சங்கர், கமலா, தமிழரசி, ஜெகதீஸ்வரி, நூறு நிஷா, சாந்தி, லட்சுமி, சைபுன் மற்றும் தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, தர்மராஜ், வர்த்தக அணி அமைப்பாளர் ரமணன், தொமுச தலைவர் அங்காளன், வர்த்தக அணி துணை அமைப்பாளர் சரவணன், விவசாய அணி துணை அமைப்பாளர்கள் ராமதாஸ், கோபி, வர்த்தக அணி துணைத்தலைவர் ஆஜ் பாய், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் தேசிகன், ஆதிதிராவிடர் அணி துணைத் தலைவர் கதிரவன், தொகுதி துணை செயலாளர்கள் அரிகிருஷ்ணன், ஜெகன்மோகன், தொகுதி செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியன், கிளைக் கழக நிர்வாகிகள் சபரிநாதன், அன்பழகன், சிவகுமார், ஜெயபால், அஞ்சா புலி, அன்பரசன், அன்பு நிதி, முருகன், ஜனா, மில்ட்ரி முருகன் , சரவணன், சேகர், சுரேஷ், வீர கண்ணு, சுல்தான், கமல் பாஷா, வாசு, சேகர், திலகர்,கலைமணி, முத்து, கோதண்டம், ராஜேந்திரன், அன்பு, கோவிந்தராஜ்,ரகு, மணி, மோகன், ராமஜெயம், ஐயனார், பாலு, லூர்து நாதன், புகாரி, நடராஜன், பாலு, ராமன்,விஜய், சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில்

# “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாம்!

## சபா. இராஜேந்திரன் தொடங்கி வைத்தார் !

நெய்வேலி, ஜூலை 17-

கடலூர் மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடக்குத்து ஊராட்சியில், முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் 2025 ஜூலை 15 அன்று சிதம்பரத்தில் தொடங்கி வைத்த “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாம், தமிழகம் முழுவதும் 10,000 இடங்களில் நடைபெறவுள்ளதன் ஒரு பகுதியாக, வடக்குத்து ஊராட்சியில் பஞ்சாயத்து அலுவலகத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி, நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.ராஜேந்திரன் அவர்களின் தலைமையில், உதவி இயக்குனர் (ஊராட்சி) தி. அ.ஷபானா அஞ்சும் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த முகாமில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட 15 அரசுத் துறைகளின் கீழ் உள்ள 46 சேவைகளுக்காக பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை அளிக்கலாம் என சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் அறிவுறுத்தினார். பெறப் பட்ட மனுக்களின் கோரிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டு, 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO) K.வெங்கடேசன், குறிஞ்சிப்பாடி தாசில்தார் விஜய் ஆனந்த், வட்டார வளர்ச்சி அலுவலர் ஜி.ராமச்சந்திரன், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் குணசேகரன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜவேல், ஒன்றிய அவைத் தலைவர் வீர.ராமச்சந்திரன், ஒன்றிய கழக நிர்வாகிகள் சடையப்பன், பிச்சையா, வாகித், மாவட்ட பிரதிநிதி இராம வெங்கடேசன், ஏழுமலை, இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோபு தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஆனந்தன், மணிகண்டன், கோவிந்தன், கல்யாணசுந்தரம், கோபால், சந்திரமோகன், மணிவண்ணன், ராஜசேகரன், சந்தானம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த முகாமில், சாதிச் சான்றிதழ், பட்டா பெயர் மாற்றம், ஆதார் 'தம், ரேஷன் அட்டை முகவரி மாற்றம், மருத்துவ காப்பீட்டு அட்டை உள்ளிட்ட பல்வேறு அரசு சேவைகளுக்கான மனுக்கள் பெறப்பட்டு, பொதுமக்களுக்கு உடனடி தீர்வுகள் வழங்கப்பட்டன. மேலும், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

# செஞ்சி பேரூராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜூலை 17-

விழுப்புரம் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முதற்கட்டமாக 15ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 14ஆம் தேதி வரை நகர்ப்புற பகுதிகளில் 21 முகாம்களும், ஊரகப்பகுதிகளில் 81 முகாம்கள் உட்பட 102 முகாம்கள் நடைபெற உள்ளது. நகர்புற பகுதிகளில் 13 அரசு துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளை சேர்ந்த 46 சேவைகள் வழங்கப்படுகிறது.

அந்த வகையில் தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள ‘உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்சிதம்பரத்தில் இன்று முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் தொடங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனரும்,கண்காணிப்பு அலுவலர் குமாரி ஆனந்தி தலைமை தாங்கினார். ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார்,மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன் வல்லம் அமுத ரவிக்குமார் மயிலம் யோகேஸ்வரி மணிமாறன் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்ஆகியோர் முன்னிலை வகித்தனர்.செஞ்சி வட்டாட்சியர் துரை முருகன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.தொடர்ந்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

அப்போது நிகழ்ச்சியில் முன்னால் அமைச்சர் செஞ்சி மஸ்தான்பேசுகையில் பொதுமக்களுக்கு வேண்டிய அனைத்து சேவைகள் மற்றும் கோரிக்கைகள் விரைவாக நிறைவேற்றிட வேண்டும் என்ற வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின்அவர்கள்சிதம்பரத்தில் இன்று தொடங்கி வைத்துள்ளார்.

இதைத் தொடர்ந்துஊரக மற்றும் நகரபகுதிகளில் இந்த திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது இதன் தொடர்ச்சியாக ஊரகப் பகுதிகளில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில்

இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்.

அந்த வகையில்ஊரகப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அதிகமாக அணுகும் 15 அரசுத்துறைகள் சார்ந்த 44 சேவைகள் மீது தீர்வு காணும் பொருட்டு இம்முகாம்கள் நடத்தப்படுகிறது.

இந்த முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின்கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்து முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 45 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனமுன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், மணிமாறன், யமாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலைபேரூராட்சிகளின் செயற் பொறியாளர் ராதாகிருஷ்ணன், டிஎஸ்பி பிரபாகரன் ,விழுப்புரம் மாவட்டம் மின்சாரத் துறைமேற்பார்வை பொறியாளர் நாகராஜ் குமார், செயற்பொறியாளர்சிவசங்கரன், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் சுகந்தி,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர்,செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் ,பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல் மணி,பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அனைத்து துறை அலுவலர்கள், பணியாளர்கள்,நிர்வாகிகள் பொதுமக்கள்,உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

செஞ்சி பேரூராட்சி செயல் அலுவலர் கலையரசிஅனைவருக்கும் நன்றி கூறினார்.

# சோழவரம் தெற்கு ஒன்றியத்தில் கழக அரசின் சாதனை விளக்கக் கூட்டம்!

சென்னை, ஜூலை 17 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு கழக ஆட்சியின் சாதனைகள் விளக்கத் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் சோழவரம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஆர்.குமரன், என்.விஜய், ஆர்.சி.சிவசங்கரன், ஜே.மைக் டைசன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

இக்கூட்டத்திற்கு தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமை தாங்கினார்.

கூட்டத்திற்கு வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் மற்றும் ஜி.கே.இனியவன், அ.காசி முகமது, கே.எம்.துரைவேல், பா.சீனிவாசன், கி.வீரம்மாள், அரசு, இரா.விஜயன், பா.சேகர், பொன் கோதண்டன், டி.ஜி.ஆர். மணிவண்ணன், வேல் கணேசன், சி.எஸ்.டி.சீனிவாசன், நா.பரசு ராமன், எஸ்.பி.குமார், ஆர்.சிவா, வி.டிசைன் ராஜ், கே.வி.தியாகராஜன், பி.வி.எத்திராஜ், ஜி.நசீர்பாஷா, கே.ஜாகிர்உசேன், எஸ்.வி.என்.பிரதீப், பி. வினோத் குமார், பி.செல்வராஜ், பெ.ஜெகநாதன், திருமலை, கே.வித்யா சாகர், ரா.எத்திராஜ், ஆ.துரை பாபு, இரா. சதீஷ்குமார், எம்.சரவணன், சுரேந்தர், எஸ்.வெங்கடேசன், ஏ.சிவகுமார், சுதாகர், எம்.விமல் முன்னிலை வகித்தனர்.

இப்பெரும் பொதுக் கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



வில்லியனூர் தொகுதியில் ரூ. 34 லட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகளை புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார். இதில் கழக நிர்வாகிகள்–அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.



விழுப்புரம் நகரத்திற்குட்பட்ட 16, 17 வார்டுகளுக்கான ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமை விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் துவக்கி வைத்தார். சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட கூடுதல் ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா, மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகர கழக பொறுப்பாளர்கள் எஸ்.வெற்றிவேல், இரா.சக்கரை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசுப் பணியாளர்

### தேர்வாணைய முன்னாள் உறுப்பினர்

# முனைவர் ஆர்.பெருமாள்சாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை,ஜீலை 17-

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய முன்னாள் உறுப்பினர் - முனைவர் ஆர்.பெருமாள்சாமி அவர்கள் நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**தகவல் அறிந்து வருந்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து நேற்று முன்தினம் விடுத்த செய்தி வருமாறு:-**

திண்டுக்கல் மாவட்டம் - ஒட்டன்சத்திரம் வட்டம் - 16 புதூர் ஊராட்சியைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் ஆர்.பெருமாள்சாமி அவர்கள், கல்லூரி முதல்வராகவும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினராகவும் தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்தின் உறுப்பினராகவும் பணியாற்றி தற்போது நூருல் இஸ்லாம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர் பொறுப்பிலிருந்தார்.

அவர் உடல்நலக்குறைவு காரணமாக 15.7.2025 அன்று பிற்பகல் சென்னை தனியார் மருத்துவமனையில் இயற்கையெய்தினார்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்புத் திட்ட முகாமை சபா ராஜேந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இதில் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.